**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# Family Relationships in the Novels of Balakumaran

**C. Tirupathi[1]*, Dr. M. Selvarasu[2],**
[1]Part-time Doctoral Research Scholar, Department of Tamil, Ganesar College of Arts and Science (Affiliated with Bharathidasan University), Melaisivapuri - 622407.
[2]Research Guide, Associate Professor & Research Advisor (Retd.), Department of Tamil, Ganesar College of Arts and Science (Affiliated with Bharathidasan University), Melaisivapuri - 622407.
Email: Selvarajum1963@gmail.com
*Correspondence: thiruppathiraja183@gmail.com.

**Article Info**
Received on 20-April-2026, Revised on 27-April-2026, Accepted on 27-April-2026, Published on 01-March-2026

## ABSTRACT

Balakumaran is a significant writer in the landscape of the Tamil novel. His works are deeply rooted in both family and society. In particular, his novels provide extensive space for exploring family relationships. By centering his narratives on middle-class individuals and those leading ordinary lives, his novels offer a profound understanding of the family as an institution.

Balakumaran illustrates through various life situations how human relationships and conflicts serve as the driving forces behind social dynamics. The novelist captures diverse mindsets where the perception of life varies for every individual and presents them as compelling fiction. Ultimately, he records the indispensability of the family for the continuous progression of human life through a simplified lens in his creative works.

***KEYWORDS:** Life, Family, Relationships, Problems, Conflicts, Unity.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# பாலகுமாரன் புதினங்களில் குடும்ப உறவுகள்

[1]**சீ. திருப்பதி,** பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது),
மேலைச்சிவபுரி - 622407

[2]**முனைவர் ம. செல்வராசு ,** நெறியாளர், இணைப் பேராசிரியர் (ம) நெறியாளர் (ப. நி), தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி ,(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
மேலைச்சிவபுரி – 622407

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் நாவல் களத்தில் பாலகுமாரன் குறிப்பிடத்தக்க எழுத்தாளர். அவரது நாவல்கள் குடும்பத்தையும் சமூகத்தையும் சார்ந்தவனாக அமைந்திருக்கின்றன. குறிப்பாக அவரது நாவல்கள் குடும்ப உறவுகளுக்கு மிகுதியான இடத்தை வழங்கியுள்ளன. நடுத்தட்டு மக்கள் சாதாரண வாழ்க்கை நடத்துவோர் ஆகியோரைப் பாத்திரங்களாகக் கொண்டு அவர் படைத்திருக்கும் நாவல்கள் குடும்பம் என்னும் அமைப்பின் ஆழமான புரிதலை வழங்குவனவாக அமைகின்றன. மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் உறவும் முரணும் எவ்வாறு சமூகத்தின் இயங்குதலுக்கு காரணமாக அமைகிறது என்பதை பாலகுமாரன் பல்வேறு வாழ்வியல் சூழல்களின் மூலம் விளக்கியுள்ளார். வாழ்க்கை குறித்த புரிதல் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோணத்தில் காட்சியளிக்கும் பல்வேறுபட்ட மனநிலைகளையும் உட்கொண்டு அவற்றைப் புனைக் கதையாக வழங்கி இருக்கும் நாவலாசிரியர், மனித வாழ்வின் தொடர்ந்த இயக்கத்திற்குக் குடும்பத்தின் இன்றியமையாமையை எளிமையான நோக்கில் படைப்புகளில் பதிவு செய்திருக்கிறார்.

**திறவுச் சொற்கள்** : வாழ்க்கை , குடும்பம் , உறவுகள், சிக்கல்கள், முரண்கள், ஒற்றுமை.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய உலகில் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் நாவில் இருந்து நாவல் இலக்கிய வரலாற்றுக் காலம் தொடங்குகிறது. சமூகம், வரலாறு, வாழ்வியல், வட்டாரம் எனப் பன்முகமான வளர்ச்சியை எட்டியிருக்கும் தமிழ் நாவல் இலக்கியக் களம் புதிய எழுத்தாளர்கள் புதுமையான கதைப் போக்கு எனத் தனக்கெனப் புதிய பாதையை வருத்துப் பன்னோக்கில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. தமிழ் நாவலாசிரியர்களில் கதைக் கரு , கதையமைப்பு, பாத்திரப் படைப்பு அனைத்திலும் தனக்கெனப் புதிய நோக்கையும் போக்கையும் கொண்டு படைப்புகளை உருவாக்கியவர் பாலகுமாரன். இவரது நாவல்கள் குடும்ப வாழ்க்கையின் பல்வேறு கோணங்களையும் கோலங்களையும் விளக்கும் தன்மையனவாகும். அவரது புதினங்களில் வெளிப்படும் குடும்ப உறவுகள் மனித சமுதாயத்தைப் புரிந்து கொள்ளவும் வாழ்வின் பல்வேறு சூழல்களையும் அறிந்துகொள்ள உதவுகின்றன. அவ்வகையில் இவ்வாய்வுக் கட்டுரை பாலகுமாரன் புதினங்களில் குடும்ப உறவுகளை ஆராய்கிறது.

**குடும்பம் - விளக்கம்**

நாடோடி வாழ்க்கை வாழ்ந்த மனிதர்கள் தங்களின் வாழ்வியல் தேவைகளின் பொருட்டு ஒரிடத்தில் தங்கி வாழத் தலைப்பட்ட போது குடும்பம் என்னும் அமைப்பும் அதனைத் தொடர்ந்து சமூகம் என்னும் அமைப்பும் தோற்றம் பெற்றது. குடும்பம் சமூகத்தின் அங்கமாகக் கருதத்தக்கது. தனி மனிதன்

ஒழுக்கமுடன் வாழவும் சமூகத்துடன் இயைந்து செயலாற்றவும் குடும்பம் என்னும் அமைப்பே வழிகாட்டுகிறது. குடும்பம் தனி மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பு வழங்குவதுடன் பற்பல நன்மைகளை வழங்குகிறது. குடும்பம், " பாலினத் தேவை உரிமையுடன் நிறைவேற்ற வசதி செய்து கொடுக்கிறது. முறையான உறவுடன் இனப்பெருக்கம் செய்வதன் மூலம் சமுதாயம் நீட்டிக்கக் காரணமாகிறது" (வாழ்வியல் கலைஞ்சியம், தொகுதி -7 , ப. 597) என்று குடும்பத்தின் பயனை வாழ்வியல் களஞ்சியம் பதிவு செய்துள்ளது. "குடும்பம் என்பது குறைந்த பட்சம் ஆண் ஒருவனுடன் பெண் ஒருத்தியும் குழந்தைகளோடு சமுதாயத்தாலோ அல்லது திருமணத்தாலோ அங்கீகரிக்கப்பெற்ற நிலையான உறவில் அமைவதாகும்" (Reecee Mc Gee (Ed) , Sociology An introduction p.295) என்று குறிப்பிடுவர். மேற்கண்ட கருத்துகள் குடும்பம் சமூகத்தின் அங்கம் என்பதை வலியுறுத்தும் சான்றுகளாகின்றன.

**கணவன் மனைவி உறவு**

ஆண் பெண் இருவரும் திருமண உறவில் இணைந்து குடும்ப வாழ்வைத் தொடங்கும்போது அவர்களின் புரிந்துணர்வின் மூலம் வாழ்க்கை சிறக்கிறது. மண வாழ்வில் ஆண் பெண் இருவரும் புரிந்துணர்வு அரவணைப்பு விட்டுக் கொடுக்கும் பண்பு ஆகியவற்றின் மூலம் தங்கள் வாழ்வை வழிநடத்துகின்றனர். அத்தகைய வழிநடத்தல் பிறருக்கும் எடுத்துக் காட்டான வாழ்வாக அமைகிறது. பாலகுமாரன் மெர்க்குரிப் பூக்கள் நாவலில் தலைமைப் பெண் பாத்திரமான சாவித்திரியைச் சிறந்த குடும்பப் பெண்ணாகவும் கற்பின் வழிச் சிறந்த பெண்ணாகவும் காட்டியிருக்கிறார். சாவித்திரி தன் கணவனுடன் அன்புறு வாழ்க்கை வாழ்ந்து அதற்கு அடையாளமாக இரண்டு குழந்தைகளையும் பெறுகிறாள். கணவன் இறந்த நிலையில் கோபாலன் சாவித்திரியை மணம் செய்து கொள்ள விரும்பும் போது தன் கணவனிடம் தான் வாழ்ந்த வாழ்வைக் கூறி அவர் இறந்தாலும் அவர் நினைவாகவே இறுதிவரை வாழ்வது சிறந்தது எனக் கூறுவது பெண்ணின் பெருந்தக்க கற்புக் கோட்பாட்டின் சிறப்பை விளக்குவதாக அமைகிறது. குடும்பம் என்னும் அமைப்பு சிதையாமல் இருப்பதில் பெரும் பங்கு பெண்களுக்கு இருப்பதையும் பெண்ணே உறவுகளின் விழுமியம் நீட்டித்து வாழக் காரணம் என்பதையும் நாவலில் பதிவு செய்துள்ளார். கணவன் மனைவியின் இடையே குழந்தை இன்மையால் ஏற்படும் மனப் போராட்டம் ஆனந்த வயல் நாவலில் பதிவு பெற்றுள்ளது. குழந்தை இன்மை கணவன் மனைவி இருவருக்கும் மனம் சார்ந்த பிரச்சினையாகவும் உறவுகள் மற்றும் பிறருக்குச் சமூகம் சார்ந்த பிரச்சினையாக அமைகிறது. நாவலில் தனக்குக் நடந்ததை இல்லை என்பதை உணரும் செண்பகம் தன் கணவனை வற்புறுத்தி இரண்டாம் திருமணம் செய்து கொள்ளுமாறு கூறுகிறாள். மனைவியின் மேல் அன்பு கொண்ட கணவன் அதை மறுக்கிறான். காலம் கடந்து குழந்தை பிறக்கும் போது குழந்தைப்பேறு அவர்கள் கொண்ட மன முறிவுக்கு மருந்தாக அமைகிறது.

**தாய் உறவு**

பாலகுமாரன் தான் படைத்த திருமணத் தீவு, அன்புக்குப் பஞ்சமில்லை, கைவீசம்மா கை வீசு, பயணிகள் கவனிக்கவும் முதலான நாவல்களில் தாய் பாத்திரத்திற்குச் சிறந்த இடத்தை வழங்கியுள்ளார். வன்னிமரத் தாலி என்னும் நாவலில் தாய்ப் பாத்திரத்தைத் திராவிடச் சிந்தனையுடன் பாலகுமாரன் புரட்சிகரச் சிந்தனையுடன் அமைத்துள்ளார். இந்நாவலில் கணவன் இறந்த பின்னும் மங்கலத் தோற்றமுடன் உலவுவதை எடுத்துக் காட்டியுள்ளார். திருமணத் தீவு என்னும் நாவலில் பாலகுமாரன் கணவனை இழந்த பெண்ணுக்கு அவளது தாய் அன்போடும் ஆதரவோடும் இருந்து கடமை செய்வதை எடுத்துக் காட்டியுள்ளார். கணவன் விட்டுச் சென்ற இடத்தைத் தாயால் நிரப்ப இயலாது எனினும் தாயின்

சிந்தனைகளும் செயல்களும் மகளின் வாழ்வை உயர்த்தும் வண்ணம் அமைந்திருக்கின்றன. கதைத் தலைவி தமயந்தியின் கணவன் மிகுந்த கடன் சுமையில் அவளை விட்டு இறந்த நிலையில் தாய் அதனைத் தான் உழைத்துத் தன்னால் இயன்ற அளவு உதவ நினைக்கிறாள். மீண்டும் தன் மகளுக்கு மணம் செய்விக்க நினைக்கிறாள். வயதை ஒரு பொருட்டாக எண்ணாமல் உழைக்க நினைக்கும் தாயின் மனநிலை, அன்பு பொறுப்பு ஆகியன நிறைந்த தாயின் சிறப்பை வெளிக்காட்டுகிறது. குடும்ப வாழ்வில் தாயின் இடம் குறிப்பிடத்தக்கது. பெற்ற குழந்தைகளை நன்றாக வளர்த்து அவர்களுக்குக் கல்வி கொடுத்துத் திருமணம் செய்யும் வரையும் அதன் பின்னரும் வாழ்வின் இறுதிவரை தாயின் பொறுப்புத் தொடர்கிறது. அத்தகையதொரு தாயின் வாழ்வை பாலகுமாரன் அத்திப்பூ நாவலில் எடுத்துக் காட்டியுள்ளார். நான்கு பெண்களைப் பெற்ற தாய் திருமண வயதுக்கு வந்து நிற்கும் நான்கு பெண்களுக்கு எவ்வாறு திருமணம் நடைபெறுமோ! என்று திகைத்து நிற்பதைக் காணமுடிகிறது. அருகாமையில் உள்ள வீடுகளில் திருமணம் நடைபெறும்போது தாயின் மனதில் ஏற்படும் உணர்வை பாலகுமாரன் நாவலில் பதிவு செய்துள்ளார். “எனக்கு மறக்கலைடி. ஞாபகம் இருக்கு. உங்களைப் பார்க்கறப்போதெல்லாம் வயிறு குழையறது. யார் ஆத்துலயாவது கல்யாணப் பத்திரிகை பார்த்தா மனசு பதைபதைக்கிறது. எங்கேயாவது மேள சத்தமும் கல்யாண ஊர்வலமும் பார்த்தா நம்மாத்துக்கு என்னிக்கு இது வரப் போறதோ அப்படின்னு ஒரு வேதனைப்படறது. சபையில யாரையாவது மாலையும், கழுத்துமா பார்த்தா என் குழந்தைகளை எப்போ பார்ப்பேன். அப்படின்னு ஒரு ஏக்கம் வருது. ஒரு அம்மாவோட வேதனை உங்களுக்குத் தெரியாதுடி' (பாலகுமாரன், அத்திப்பூ, ப. 70)

**மண உறவின் சிறப்பு**

குடும்ப வாழ்வின் நீட்சிக்கு மண உறவு இன்றியமையாதது. தொன்மையான சமூகப் பின்புலம் கொண்ட தமிழகத்தின் சிறப்புகளுக்கு அடித்தளமாக அமைவது திருமண உறவும் குடும்ப அமைப்பும் எனில் மிகையில்லை. குடும்ப உறவே சமூகத்தின் நீட்சிக்குக் காரணமாக அமைகிறது என்னும் சிந்தனை ‘கண்ணே கலைமானே’ நாவலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தனியார் விற்பனையகத்தில் தொலைக்காட்சி விற்பனைப் பிரிவில் பணியாற்றும் வந்தனா, ரமணி முதலான பாத்திரங்களின் மூலம் மண வாழ்வின் சிறப்புக் குறித்த சிந்தனை பதிவு பெற்றுள்ளது. தம்மோடு பணியாற்றும் ஊழியரின் திருமணம் பொருளாதாரச் சிக்கலால் காலம் கடக்கும் போது, “எத்தனையோ காலமா இருக்கிற திருமணம்கற விஷயம் இன்னிக்குத் தப்பாயிடுமா தப்பா இருந்தா இத்தினி நாள் வரைக்கும் இருக்குமா. திருமணம் குடும்பம் இரண்டுமே அழியாது. அழியமுடியாது இந்த அழிஞ்சா உலகமும் அழிஞ்சிடும். மனுஷனுடைய வன்முறை குணத்தை பாதியா குறைக்கிறது திருமணம். குடும்பம் இல்லைன்னா ஒருத்தரை ஒருத்தர் வெட்டி மனுசன் சீக்கிரமே செத்துப் போயிடுவான்" (பாலகுமாரன் , கண்ணே கலைமானே , ப. 19) என்றவாறு திருமணம் குறித்துப் பேசுவது மணம் குறித்த அவர்களின் பொறுப்புணர்வை அறிந்து கொள்ள உதவுகிறது. வறுமையின் காரணமாக மணம் செய்து கொள்ளக் கூடாது என்று நினைத்த சித்திரா பணி முடிந்து வீட்டுக்குச் சென்றதும் மணம் குறித்தும் தனக்கு வரும் மணமகன் இவ்வாறு இருப்பின் நலம் என்றும் சிந்திக்கிறாள். பாலகுமாரன் கல்வியை விடவும் குடும்ப உறவு பாதுகாப்பானது என்பதை கண்ணே கலைமானே நாவலில் உணர்த்தியுள்ளார். சூழ்ந்துள்ள உறவுகளும் வாழ்வும் சரியில்லாத போது படிப்பு பாதுகாப்பை வழங்குகிறது. ஆனால் உறவுகள் வலிமையாக இருக்கும் போது படிப்பை விடவும் வாழ்வே சுகமானது என்பதை, “வாழ்க்கை பத்தி பயம் இருந்தாத்தான் படிப்பு பாதுகாப்புன்னு நினைப்போம் ஆனா படிப்பு பாதுகாப்பே இல்லை

மனுஷங்கதான் பாதுகாப்பு நல்ல புருஷன் நல்ல மாமனார் பிரியமான மச்சினன் ஸ்நேகிதமான நாத்தனார் அப்படின்னு ஒரு கும்பல் கிடைச்சுட்டுச்சுன்னு வச்சுங்கோங்க அதைவிட சந்தோஷம் உலகத்தில் எதுவுமில்லை" (பாலகுமாரன், கண்ணே கலைமானே , பக். 68, 69) என்னும் சிந்தனையின் வழி விளக்குகிறார். இச் சிந்தனை குடும்ப வாழ்வின் வலிமை உறவுகளின் தன்மையைக் கொண்டே அமைகிறது என்பதை விளக்குகிறது.

கணவன் பொறுப்பு மிக்கவனாகவும் மனைவியின் மீது அன்பு செலுத்துபவனாகவும் இருப்பின் குடும்பம் நன்றாக இருக்கும். கணவன் பொறுப்பு இல்லாமலும் அன்பில்லாமலும் இருப்பின் வாழ்வில் நிலையற்றதன்மை ஏற்படும். இத்தகைய சூழலை பாலகுமாரன் ஆசை என்னும் வேதம் நாவலில் படைத்துக்காட்டுகிறார் . இக்கருத்து வசுமதி பாத்திரம் மூலம் வெளிப்படுகிறது. " புருஷன் புருஷனாய் இருக்கும் போது பெண் பத்தினியாய் இருக்க முடியும். பத்தினியாக மனைவி மலர ஏக பத்தினி விரதம் சுலபம் எனக்கும் புருஷன் செத்துப் போனது குறையில்லை. செத்துப் போனவன் புருஷனா இல்லையே என்கிற குறை நல்ல புருஷனோடு வாழவில்லையே என்கிற குறை என் அரிப்பு உடம்புல இல்ல. என் மனசுல" (பாலகுமாரன், ஆசை என்னும் வேதம் , ப. 83)

**கலப்பு மணமும் உறவும்**

குல மரபு மாறித் திருமணம் செய்வதைத் கலப்புத் திருமணம் என்று சமூகம் கூறுகிறது. கலப்பு மணம் செய்பவர்கள் தங்கள் சாதியை விடுத்துப் பிற சாதியில் மணம் புரிகின்றனர். உறவுகள் ஏற்கவில்லை எனில் தனிமைப்படுத்தப்படுகின்றனர். அத்திப்பூ நாவலில் பாலகுமாரன் பொருளாதாரப் பின்னணி இல்லாத குடும்பத்தில் பிறந்த பெண்களின் நிலை என்ன என்பதை விளக்குகிறார். வறுமையும் தந்தையின் கடுமையும் வழிகாட்டல் இன்மையும் பருவ வயது கடந்த பெண்களை மாற்றிச் சிந்திக்கச் செய்கிறது. பெண்கள் தாங்களாகவே முயற்சி செய்யவில்லை எனில் மணம் நடைபெறாது என நினைத்துக் குடும்பச் சூழலில் இருந்து வெளியேறித் தங்களுக்கான பணி வாய்ப்பைப் பெறுவதுடன் பிற மொழி பேசுபவர்களை மணம் புரிந்து கொள்கின்றனர். சமூகத்திற்கு அவர்கள் செயல் மரபு மீறியதாக இருக்கலாம் ஆனால வாழ்க்கைப் பாதுகாப்பு எனச் சிந்திக்கும் போது அவர்கள் செய்த செயல் சரியே எனச் சிந்திக்க வைக்கிறது.

**உறவுநிலை**

பாலகுமாரன் நாவல்கள் குடும்ப உறவில் கணவன் மனைவி , தந்தை மகன், தந்தை மகள் எனப் பன்முகமான உறவுச் சூழலை விளக்குவனவாக அமைந்திருக்கின்றன. நான்கு பெண் பிள்ளைகள் உள்ள வீட்டின் நிலையும் தந்தை தாய் மகள்களின் மனநிலையும் எப்படி இருக்கும் என்பதை பாலகுமாரன் நாவல்களில் நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். குறிப்பாக, அத்திப்பூ நாவலில், "நம்ம வீட்டுக்கு இவங்களெல்லாம் சொல்ற சம்பிரதாயக் கல்யாணம் சரியா வராது. நாம நாலுபேரும் நாலு ஆம்பளைங்களை லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிண்டா தான் நல்லா இருக்க முடியும். நம்ம அப்பா மனையில உட்கார வச்சு மடியில உட்கார வச்சுக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பார்னு எனக்கு நம்பிக்கையே கிடையாது. அவருடைய வெத்துக் கோவமும் சம்பாத்திக்க முடியாத ஆத்திரமும் நம்மள குலைச்சுத்தான் போடுமே தவிர நம்மள வளர்க்காது" (பாலகுமாரன், அத்திப்பூ, ப. 72) என்று பேசும் மகளின் பேச்சு குடும்ப நிலையை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. குடும்பத்தில் ஆண்மகன்

பொருளாதாரத்தில் தன்னிறைவு பெறும்போதுதான் அவனுக்குக் குடும்பத்தில் மதிப்பு இருக்கும் என்பதையும் அவ்வாறு இல்லை எனில் அவரது குணமே பெற்ற பிள்ளைகளின் வாழ்க்கை நிலைக்கும் காரணமாக அமையும் என்பதையும் விளக்குகிறது. இதனால் பொருளாதாரம் வாழ்வை மட்டுமல்ல நல்ல உறவையும் முடிவு செய்கிறது என்பதை பாலகுமாரன் விளக்கியுள்ளார்.

மாமியார் மருமகன் உறவு ஆனந்த வயல் நாவல் மூலம் விளக்கப்படுகிறது. பொதுவாக தமிழ்ச் சமுதாய மரபில் மருமகன் மாமியாருடனோ மாமியார் மருமகனுடனோ அதிகம் பேசுவது இல்லை. பாலகுமாரன் தன் மகளின் வாழ்க்கைக்காக மாமியார் மருமகனுடன் பேசும் சூழலை அமைத்துள்ளார். தன் மகளுக்குக் குழந்தை பிறக்கவில்லை என்பதற்காக மருமகன் வேறு ஒரு பெண்ணை மணந்து விடுவானோ என்னும் அச்ச உணர்வு தாயின் மனதில் இருக்கிறது. அந்த அச்ச உணர்வை அவள் தன் மகளுக்காக விடுத்து மருமகனுடன் பேசுகிறாள். தன் மகளின் வாழ்வுக்காக அவளைத் தவிர யாரையும் மணம் செய்து கொள்ள மாட்டேன் என்று மருமகனிடமே சத்தியம் பெறுகிறாள்.

**பொருளாதார உறவு**

மனித வாழ்வில் குறிப்பாக மண வாழ்வைப் பொருளாதாரம் முடிவு செய்கிறது. திருமணம் மணக்கொடை என்றும் வரதட்சிணையை மையமிட்டதாக அமைந்திருக்கிறது. மணக் கொடை காரணமாகப் பல குடும்பங்களில் பெண்கள் மணம் ஆகாமலேயே இருக்கின்றனர் என்னும் சிந்தனையையும் பாலகுமாரன் பதிவு செய்துள்ளார். கள்ளி என்னும் நாவலில் வரதட்சிணையால் பெண்கள் படும் இன்னல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாவலில் அருணாசலம் தன் மனைவி சகுந்தலாவுக்குக் கொடுத்த இன்னல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வரதட்சிணை கேட்டு அருணாசலம் மனைவியைக் கொடுமை செய்த காரணத்தால் அவள் தீ வைத்துக்கொண்டு இறந்து போகிறாள். பிறர் பார்வையில் அருணாசலம் நல்லவனாக வாழ்ந்திருக்கிறான். அவன் மனைவி இறந்து அச்செய்தி செய்தித் தாளில் வெளியானபோது அவளை அறிந்த அனைவருக்கும் அச்செய்தி அதிர்ச்சி தருவதாக அமைந்ததை, "வீடு கதிகலங்கிப் போயிற்று. நல்லவேளை தப்பித்தோம் என்று எல்லாவித தெய்வங்களுக்கும் வந்தனம் செய்தது. இவனைப் போய் நல்லவன் என்று சொன்னார்களே. இவனைப் போய்க் கொண்டாடினார்களே என்று வியந்தது. எல்லோரையும் ஏமாற்றிவிட்டு உள்ளுக்குள் மிருகமாய் வாழ்ந்திருக்கிறான் என்று அவனை விமர்சனம் செய்தது. நல்ல வேளை நம் குழந்தை தப்பித்தாள். நாம் செய்த புண்ணியம், நாம் செய்த பாக்கியம் என்று கண்ணீர் வழிய கைகூப்பினார்கள் அன்னபூரணியின் பெற்றோர்கள்" (பாலகுமாரன், கள்ளி, ப. 93 ) என்னும் பகுதி விளக்குகிறது.

**மறுமண உறவு**

பெண்ணின் வாழ்வியல் பாதுகாப்புக்கு மண உறவு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. கணவனை இழந்த பெண்களுக்கு மறுமணம் சிறந்த பாதுகாப்புத் தருவதை பாலகுமாரன் எடுத்துக் காட்டியுள்ளார். பாலகுமாரன் வழக்கமாகச் சமூகத்தில் பின்பற்றப்படும் பண்பாட்டு மாற்றத்தை நாவல்களில் பதிவு செய்துள்ளார். ஆசை என்னும் வேதம் நாவலில் வசுமதி என்னும் பாத்திரத்தின் வாழ்வியலின் நிகழ்வுகளை எடுத்துக் காட்டி வசுமதி பாத்திரம் மூலம் மறுமணத்தை எடுத்துக் காட்டுகிறார். வசுமதி கணவனை இழந்த பின்பு தன் வாழ்வின் நிலை கருதி மற்றொரு ஆடவனைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறாள்.

நகர வாழ்வியலில் இயல்பாக நடைபெறும் நிகழ்வுகள் புதிய நோக்கில் பாலகுமாரன் நாவலில் பதிவு செய்துள்ளார்.

**முடிவுரை**

பாலகுமாரன் புதினங்கள் குடும்ப உறவை விளக்குவதில் சிறந்து விளங்குகின்றன. குடும்ப வாழ்வில் வாழும் பாத்திரங்களின் வாழ்வு வாழ்வியல் நிகழ்வுகளை மையமிட்டதாக அமைந்திருப்பதை பாலகுமாரன் எடுத்துக்காட்டியுள்ளார். குடும்பம் என்னும் அமைப்பு சமுதாயப் பாதுகாப்பை வழங்குவதுடன் சடங்குகள் நம்பிக்கைகள் முதலானவற்றையும் பண்டைய மரபுகளையும் காக்கும் சமூக நிறுவனமாக விளங்குகிறது. குடும்ப உறுப்பினர்கள் புரிந்து கொள்ளுதல் விட்டுக் கொடுத்தல் முதலான பண்புகள் மூலமும் திருமணம் முதலான உறவு நிலைகள் மூலம் சமுதாய நீட்சிக்கும் உதவுகின்றனர் என்பதை பாலகுமாரன் வலியுறுத்தியுள்ளார் . மனிதனின் உறவில் முரண்கள் விளைவதாலும் பொருளாதாரச் சிக்கல்களால் வாழ்வில் பல இன்னல்கள் உருவாவதையும் பாலகுமாரன் எடுத்துக் காட்டியுள்ளார். பாலகுமாரனின் நாவல்கள் மனிதனின் குடும்ப உறவு நிலையைத் தெளிவாக விளக்குகின்றன.

**துணை நூற் பட்டியல்**

[1.] நா. பாலுச்சாமி, நா. (ப. ஆ ), வாழ்வியல் களஞ்சியம், தொகுதி - 7, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1986

[2.] பாலகுமாரன், அத்திப்பூ, சென்னை : லிசா பப்ளிகேசன்ஸ், 1998

[3.] பாலகுமாரன், கண்ணே கலைமானே , சென்னை : விசா பப்ளிகேஷன்ஸ், 1997

[4.] பாலகுமாரன், கள்ளி, சென்னை : விசா பப்ளிகேசன்ஸ், 1998

[5.] பாலகுமாரன், ஆசை என்னும் வேதம், சென்னை: திருமகள் நிலையம், 2011

[6.] Reecee Mc Gee (Ed) , Sociology An introduction, New York: Purduc university, 1980

References

[1]. Balakumaran. *Asai Ennum Vedham* [The Veda Called Desire]. Thirumagal Nilayam, 2011.

[2]. ---. *Athippoo* [The Fig Flower]. Lisa Publications, 1998.

[3]. ---. *Kalli* [Cactus]. Visa Publications, 1998.

[4]. ---. *Kanne Kalaimane*. Visa Publications, 1997.

[5]. Balusamy, N., editor. *Vazhviyal Kalanjiyam* [Encyclopedia of Life]. Vol. 7, Tamil University, 1986.

[6]. McGee, Reece, editor. *Sociology: An Introduction*. Purdue University, 1980.